# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 24 வியாழக்கிழமை 10.10.2024 கதிர் 383







# நீதி மறுக்கப்படுவது தொடர்ந்தால் சர்வதேச நடவடிக்கை அவசியம்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து




பாதிக்கப்பட்டவர்களிற்கும் அவர்களது குடும்பத்தவர்களிற்கும் நீதி மறுக்கப்படுவது தொடர்ந்தால் இலங்கை தொடர்பில் சர்வதேச நடவடிக்கை அவசியம்என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜெனீவாவிற்கான பிரதி இயக்குநர் லூசி மக்கேர்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களிற்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

6➤




# தேசிய மக்கள் சக்தி யாழில் இன்று வேட்புமனு தாக்கல்

நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை தேசிய மக்கள் சக்தி இன்று யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்தது.

இன்று காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், யாழ் மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட குழுவினர் வேட்புமனுவை கையளித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளராக க.இளங்குமரன் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எமது கட்சி பொது தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

## விமல் வீரவன்ச அறிவிப்பு



இம்முறை பொதுத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடப் போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால தொடர்பு மற்றும் அதற்கு மதிப்பளிக்கும் அரசியல் இயக்கமாக ஜனாதிபதிக்கு கிடைத்த மக்கள் ஆணையை பாதுகாப்பதற்காக முன்னிற்பதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக நாடாளுமன்ற வகிபாகத்தை விட அதற்கு வெளியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடு முக்கியமானதாகவும் பலமான தாகவும் அமைய வேண்டும் என

6➤

# யாழில் தமிழரசு வேட்புமனுத் தாக்கல்







இலங்கைத் தமிழரசுக் கட்சியினர், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று வியாழக்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை முதன்மை வேட்பாளராகக் குறிப்பிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

இன்று முற்பகல்9.40 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தமிழரசுக்கட்சியினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சந்திரஹாசன் இளங்கோவன், இம்மானுவேல் ஆனால்ட், கேசவன் சயந்தன், தியாகராஜா பிரகாஷ், சந்திரலிங்கம் சுகிர்தன், கிருஷ்ணவேணி சிறீதரன், சுரேகா சசீந்திரன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

மேற்படி 9 வேட்பாளர்களும் வேட்புமனுத் தாக்களின் பின்னர் தந்தை செல்வா நினைவுச்சதுர்க்கத்தில் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடு முழுவதும் களமிறங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி



தமிழர் விடுதலைக் கூட்டணி ஆனது வடக்கு கிழக்கிற்கு அப்பால் தெற்கிலும் போட்டியிடவுள்ளதாக முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மயில்வாகனம்

6➤

# தேசியப் பட்டியலில் நாமல்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவை இம்முறை பொதுத் தேர்தலில் ஒரு மாவட்டத்தில் இருந்து போட்டியிட்டவருக்குப் பதிலாக தேசியப் பட்டியலில் சேர்க்கத் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

நாடு முழுவதும் தேர்தல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால்அவர் அந்த முடிவுக்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதால் மீண்டும் தமது அரசியல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்தலைமைக்காரியாலயத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க, நாமல் ராஜபக்ஷவை ஒரு மாவட்டத்திற்கோ அல்லது தொகுதியிற்கோ மட்டுப்படுத்தி தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க எந்த எதிர்பார்ப்பு இல்லை. முழு நாட்டுக்கும் அவர் செல்ல வேண்டும் என்றார்.




# அம்பாறையில் தமிழரசுக் கட்சி வேட்புமனுத்தாக்கல் செய்தது

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில்போட்டியிடுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் இன்று வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தனர் .

தலைமை வேட்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தலைமையிலான பத்து பேர் வேட்புமனுவில் ஒப்பமிட்டனர்.

வேட்புமனுவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் ( அக்கரைப்பற்று ) முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்( காரைதீவு) குபேந்திரராஜா ஜெகசுதன்( திருக்கோவில் ) கந்தசாமி இந்துனேஷ்(திருக்கோவில்) அருள்ஞான மூர்த்தி நிதான்சன்( கல்முனை ) பேரின்பநாயகம் ஜீவராஜ்(தம்பிலுவில்) பாக்கியம் மஞ்சுளா(பெரிய நீலாவணை) ஜெயக்குமார் யசோதரன்( வளத்தாபிட்டி ) கனகரத்தினம் ஜனார்த்தனன (ஆலையடிவேம்பு )ஆகியோர் ஒப்பிட்டுள்ளனர். இன்றுபகல் 11.50 மணியளவில் இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் பட்டியல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

# வன்னியில் ‘சங்கு’ வேட்புமனுத் தாக்கல்








நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்று வியாழக்கிழமை தாக்கல் செத்தனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றனர். அவர்கள் இன்று மதியம் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் கந்தையா சிவனேசன், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பேச்சாளர் க.துளசி, முன்னாள் போராளி யசோதினி, சமூகச் செயற்பாட்டாளர் மூர்த்தி, வர்த்தகர் அ.றொயன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றம் தமிழ் மக்களுக்கான மாற்றம் அல்ல

## ஜெனீவா அதனை உணர்த்தியுள்ளது என்கிறார் சுரேன்

தமிழ் தேசியத்தின்பால் பயணிக்கின்ற மக்களின் திரட்சியாக சங்குச் சின்னம் நாடாளுமன்றத் தேர்தலில் அதிகப்படியான ஆசனத்தை பெற்று வெற்றி பெறும் என்று ரெலோ அமைப்பின் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சுரேன் குருசுவாமி தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சங்குச் சின்னத்தில் தமிழ் தேசியத்தின் திரட்சிக்காக பொது வேட்பாளர் களம் இறக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் அவருக்கு அமோக ஆதரவை வழங்கினார்கள். அந்த ஆதரவை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் சங்கு சின்னத்தில் களமிறங்கியுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் தமிழ் மக்களுக்கான

மாற்றம் கிடையாது. அதனை அரசாங்கம் ஜெனிவா தொடர்பில் வெளியிட்ட கருத்து

தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. ஜெனிவா தீர்மானத்தை முற்றாக நிராகரிக்கிறோம் உள்நாட்டு பொறிமுறை மூலமே பிரச்சனைகளுக்கான தீர்வு என இலங்கை அரசாங்கம் தெரிவித்திருக்கின்ற நிலையில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு சிதறடிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் தமிழருக்கு ஏதாவது செய்யும் என பெரும்பாலானோர்

எதிர்பார்த்திருக்கும் நிலையில்,அவர்களின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை வழங்கியுள்ளதுடன் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் பால் பயணிக்கின்ற கட்சிகள்

ஒன்றிணைந்து சங்குச் சின்னத்தில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி எமது பலத்தை

காட்டியுள்ளோம். அடுத்து நாடாளுமன்றத் தேர்தலை



எதிர்கொள்வதற்காக, ஓரணியில் பயணிக்கின்ற தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்தில் களமிறங்கி உள்ளன” என்றும் சுரேன் குருசுவாமி தெரிவித்தார்.



# தமிழரசின் கொள்கை வெல்ல வாக்களியுங்கள்:

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கையைச் சுமந்து, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யுங்கள் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்றையதினம் யாழ் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரனால், யாழ் மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர், கட்சியின் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்து ஆசிபெறச் சென்ற சிறீதரனுக்கு, வாழ்த்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




# தபால் மூல வாக்களிப்பு விண்ணப்ப அவாசம் நள்ளிரவுடன் நிறைவு

*நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால எல்லை இன்று வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகிறது.*


*இந்த விண்ணப்பங்கள்ஏற்றுக்கொள்ளும் பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12மணியுடன்நிறைவடையவிருந்த நிலையில் அன்றைய தினம் மேலும் இரு நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.*

*தபால் செயற்பாடுகளில் காணப்பட்ட தாமதம்மற்றும்தேர்தல்ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைய கால எல்லை நீடிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர்நாயகம்சமன்ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார்.*

*இதற்கமைய அன்றைய நாள் நிறைவடையவதற்கு முன்னர் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.*

*மேலும், எந்தவொரு காரணத்திற்காகவும் இந்த திகதியில் எதுவித மாற்றமும் மேற்கொள்ளப்படாது என தேர்தல்கள் ஆணையாளர்நாயகம்சமன்ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.*

# புதிய ஊடகக் கலைப் படைப்புகளின் கண்காட்சி



**ஶ்ரீ.கிருபாகரன் டிசானி.**
நுண்கலைத்துறை
கலைவரலாறு சிறப்புகலை மாணவி.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணபல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைவட்டத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குச் செய்யப்பட்டு சுயத் தோற்றம்: புதிய ஊடகக் கலைப் படைப்புகளின் காண்பிக் காட்சியானது பல்கலைக் கழக கலைக்கூட்டத்தில் முதலாம் திகதி ஒக்டோபர் தொடக்கம் 6 ஒக்டோபர் 2024 வரையிலான திகதிகளில் காட்சிப்படுத்தப்படுத்தப்பட்டது.



இக்காட்சியிடலானது மட்டக்களப்பைச்சேர்ந்த சமகால கலைஞரான றினோசன் சுசிமனின் கலைப் பயணத்தின் சாரத்தை உள்ளடக்கிய படைப்புகளின் தொகுப்பைவழங்குகிறது. இவர் கலை மற்றும் வடிவமைப்பில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்றவர். அவரது கலைப்படைப்புக்கள் சமூகம் மற்றும் அரசியலுடன் மக்கள் சுயத்தை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதை டிஜிட்டல் தொழிநுட்பத்தினூடு வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

சமகாலக் கலைவெளிப்பாடுகள் இருபதாம் நுற்றாண்டின் தொடக்கத்தில் உருவான நவீன வாதக்கலைக்கான எதிர்வினையாகக் காணப்படுகிறது. இது கலைப்படைப்பாக்கத்தில் அர்த்தத்தைஉருவாக்குவதில்கலைஞன்மாத்திரம் இன்றி பார்வையாளர்களையும் பங்கு கொள்ள செய்கின்றது. மேலும் பெருங்கதைகள் மற்றும் உலக பொது உண்மை பற்றிய கருத்துக்களை நிராகரித்தது. கருப்பொருள் தெரிவு ரீதியாக சுய அடையாளம், இனம், பாலினம், உரிமை, ஊழல் மற்றும் அரச அடக்குமுறை ஆகியவற்றின் பிரச்சினைகளை நேரடியான அணுகு முறையில் விமர்சித்தது.

பார்வையாளர்களையும் அவ்விமர்சன எல்லையில் ஊடாடச் செய்தது. படைப்பில் மரபார்ந்த கலை போன்றுஊடகத்தை தொட்டுணர முடியாது. ஊடகமானது சிந்தனையின் வெளிப்பாடாக பொருண்மை இழக்கப்பட்டு புதிய ஊடகக் கலை, வீடியோ மற்றும் ஸ்தாபன கலை வடிவங்களில்இலத்திரனியல்தொழில்நுட்ப சார்ந்த ஊடகங்களை பயன்படுத்தி பார்வையாளனை கவர்ந்திழுத்து மாயமான வினோத அனுபவத்தை ஏற்படுத்துவதுடன் கலைநுகர்வில் கட்புல நுகர்ச்சியுடன் மட்டுப்படுத்தப்படாது பார்த்தல், கிரகித்தல், ஊடாடுதல் என படைப்புடனான நெருக்கத்தை ஓசை மற்றும் வெளிச்சம் ஊடாக ஏற்படுத்துகிறது. மேலும் எது கலை என்ற கேள்வியுடன் கலைப்படைப்புக்கான காண்பீய கருத்துரு மற்றும் சந்தைப்படுத்தலில் கலையை விற்றல் வாங்கலினை கேள்விக்குட்படுத்தியது.

இந்தப்பின்னனியில் றினோசனின் படைப்புகள் கோட்பாட்டு அணுகுமுறை ரீதியாக பின்நவீன கருத்தியலால் தாக்கப்பட்டுள்ளது. இவரால் 2024இல் உருவாக்கப்பட்ட "வரையறுக்கப்படாத நிலப்பரப்புகள்" எனும் தொழிநுட்ப தொடர், டிஜிட்டல் திரையில் காண்பிக்கப்படும் டூடிஸ் ஒப் தி நைட் எனும் 2022 செய்யப்பட்ட வீடியோ கலை வடிவம், சிம்பொனி இசையிலான சுயம் என்னும் தாபன கலை படைப்பு, விளிம்புடனாக ஊடாடும் திட்டம் ஆகியவை கலைக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. ஊடக ரீதியிலான கணனியினுாடான மென்பொருள் டிஜிடல் கலை, கணனி கிராபிக்ஸ், இணையக்கலைபோன்ற தொழில்நுட்பவடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொழிநுட்ப வளர்ச்சியுடன் குறிப்பாக தொலைக்காட்சி, கணனி என்பவற்றின் வருகையுடன்இக்கலைப் போக்கின் வீழ்ச்சும் பரப்பும்விசாலிக்கப்பட்டு கலையில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தவும் வழி சமைத்துள்ளது.

இக் கலை போக்கு மேற்குலகில் 1970களில் இருந்து இன்று வரை பார்வையாளருடன் ஸ்த்திரமான ஊடாட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இலங்கையில் இக்கலை வடிவத்தை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் ஸ்த்திரமான நிலையை எய்த மேலும் சில காலங்கள் எடுக்கலாம். காரணம் இக்கலை வடிவில் பார்வையாளருக்கும் கலை படைப்புக்கும் இடையிலான ஊடாட்டம் மிக முக்கிய அம்சமாக திகழ்கிறது. உண்மையில் கலையை பூரணப்படுத்துவது பார்வையாளரின் பங்களிப்பாக காணப்படுவதால் புதிய ஊடக கலையில் பார்வையாளன் கலைப்படைப்புக்கான அங்கீகாரத்தை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றான்.


பார்வையாளர்கள் தமது அனுபவம் பற்றி குறிப்பிட்ட விடயங்களில் இருந்து நவீன கலைப்போக்கின் மாற்றத்தில் கலை படைப்பு இப்படியும்காணப்படுமா? என்ற கேள்வி தமக்குள் எழுந்ததாக குறிப்பிட்டனர். மேலும் புதுவிதமான முயற்சியாக யாழ்ப்பாண பொதுவெளியில் தாம் இக் காட்சியிடலை பார்வையிடுவதாகவும் கருத்து தெரிவித்தனர். கலைசார் காட்சியிடலில் பார்வையாளர்கள் ஓவியம், சிற்பம் மற்றும் கைவினை சார்ந்த கலை வெளிப்பாடுகளின் அனுபவத்தையே அதிகமாக பெற்றுள்ளனர்.

ஆனால்இக்காட்சியானதுதொழில்நுட்ப கலை சார் வினோதமான ஊடாட்ட அனுபவத்தையும் பின்நவீன கலை குறித்த நேரடி பரீட்சயத்தையும் முதன் முறையாக யாழ்ப்பாணத்திலுள்ள பார்வையாளர்களிடம் ஏற்படுத்த காட்சியிடல் தவறவிடவில்லை. கலை எப்போதும் புதுமை பற்றியது.

அது சமூகத்தில் நிகழும் கருத்துரவ மற்றும் ஊடக ரீதியான மாற்றங்களுக்கு எதிர்வினையாற்றுகிறது என்ற வகையில் சமகாலக்கலையில் நிகழ்ந்துவரும் போக்கு மாற்றத்தை தரிசிக்கும் வாய்பாக இக்காட்சி அமைந்திருந்தது.

## இயற்பியல் நோபல் பரிசை பெறும் இரு விஞ்ஞானிகள்!

**செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் ஆர்டிபிஷியல் நியூரல் நெட் வொர்க்ஸ் தொடர்பான கண்டுபிடிப்புக்காக இவர்கள் இருவருக்கும் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது**




இயற்பியலுக்கான இந்த ஆண்டு நோபல் பரிசு அமெரிக்காவை சேர்ந்த ஜான் ஹாப்ஃபீல்டு மற்றும் கனடாவின் ஜெஃப்ரீ ஹின்டன்ஆகிய இருவருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி,பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2024-ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அறிவிக் கப்பட்டு வருகின்றன.

முதல் நாளில் மருத்துவத் துக்கான நோபல் பரிசு அமெரிக்க விஞ்ஞானிகள் விக்டர் அம்ரோஸ் மற்றும் க்ரே ருவ்குன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் நாளான நேற்று இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இதன்படி அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலை. விஞ்ஞானி ஜான் ஹாப்ஃபீல்டு, கனடாவில் வசிக்கும் பிரிட்டன் விஞ்ஞானி ஜெஃப்ரீ ஹின்டன் ஆகியோருக்கு பகிர்ந்து அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் ஆர்டிபிஷியல் நியூரல் நெட் வொர்க்ஸ் தொடர்பான கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு உள்ளது.

மனித உடலின் செயல்பாட்டுக்கு நரம்பு மண்டலம் உறுதுணையாக இருப்பதுபோல் கணினிக்கு ஆர்டிபிஷியல் நியூரல் நெட் வொர்க்ஸை இவர்கள் உருவாக்கி உள்ளனர்.

இதன் மூலம் கணினியே சுயமாக தகவல்களை மனனம்செய்து தரவுகளை கற்றுக் கொண்டு செயல்படும். வெவ்வேறு தகவல்களை சேகரித்து அவற்றை வகைப்படுத்தி, எதிர்காலத்தில் என்னவெல்லாம் நிகழும் என் பதை கணித்து, முடிவுகளை தானேஎடுக்கும். இந்த புதிய கண்டுபிடிப்பில் இயற்பியல், உயிரியல் மற்றும் கணினி அறிவியல் ஆகியமூன்று துறைகளும் கூட்டாகஇணைத்துப்பயன்படுத்தப்பட்டு உள்ளன.

இந்த கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருக்கும் விஞ்ஞானி ஜெஃப்ரீ ஹின்டன் 'செயற்கை நுண்ணறிவின் பிதாமகன்' என்று போற்றப்படுபவர். அவருக்கு வயது 76. அதைவிடவும் விஞ்ஞானி ஜான் ஹாப்ஃபீல்டுக்கு 94 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

# வேட்பாளர்களை தெரிவு செய்வதில் நெருக்கடிக்குள் பிரதான கட்சிகள்

## தலைமைகளுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் உள்வீட்டு அழுத்தங்கள்

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் நடவடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை நண்பகலுடன் முடிவடையவுள்ள நிலையில், பிரதான கட்சிகள் சில இதுவரையில் வேட்பு மனுக்களை தயாரிக்கும் பணிகளை பூர்த்தி செய்ய முடியாது நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

அதேவேளையில், ஆளும் தேசிய மக்கள் சக்திக்கான அலை வீசுவதால், அக்கட்சியில் போட்டியிடுவதற்கு பலர் முண்டியடிப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. இதனால், தீர்மானம் எடுப்பதில் அக்கட்சியும் திண்டாடுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி உள்ளிட்ட கட்சிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் வடக்கு, கிழக்கிலும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் வேட்பாளர் பட்டியல் தயாரிப்பது தொடர்பில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அவர்களுடைய கூட்டணியில் பல்வேறு கட்சிகள் அங்கத்துவம் கொண்டுள்ளமையினால் வேட்பாளர் பட்டியலை தயாரிப்பதிலும், தேசியப் பட்டியலுக்கான பெயர்களை குறிப்பிடுவதிலும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தமது கட்சியின் வேட்பாளர் பட்டியல் தொடர்பில் அதிருப்திகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும், இதனால் அது தொடர்பான கலந்துரையாடல்கள் நேற்று இரவும் நடைபெற்றதாகவு வும்கூறப்படுகின்றது.

நேற்றைய தினம் முற்பகல் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் வேட்புமனுக்கள்தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட நிலையில் அதில் கலந்துகொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தனது அதிருப்தியை வெளியிடும் வகையில் கருத்து கூறியுள்ளார்.

“ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுவதால் வேட்பாளர் பட்டியலை தயாரிப்பது தொடர்பான நான்கு சுற்று கலந்துரையாடல் நடத்தப்பட்டது. சில மாவட்டங்களில் எமது வேட்பாளர்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவில்லை. அதனை அடிப்படையாகக் கொண்டே நாங்கள் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டிவரும். இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

வேட்பாளர்கள் தொடர்பில் சில மாவட்டங்களில் காணப்படும் சிக்கல்களை தீர்த்துக்கொள்ள வேண்டும். சில தரப்பினர் நாங்கள் இன்றி தனியாக போட்டியிடுவதற்கும், எங்களை தனியாக போட்டியிடச் செய்வதற்காகவும் முயற்சிகளில் ஈடுபடுவதாக தெரியவருகின்றது. ஆனால் நாங்கள் தொடர்ந்தும் பேசி வருகின்றோம்” என்று ஹக்கீம் தெரிவித்தார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான கூட்டணியிலும் சில மாவட்டங்களில் வேட்பாளர்கள் தொடர்பில் இறுதி முடிவுகள் எடுக்கப்படாதிருக்கும் நிலையில், இன்றைய தினத்தில் அது தொடர்பில் முடிவெடுத்து வேட்பு மனுக்கள் தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் சிலவும் வேட்பு மனுக்களை தயாரிப்பது தொடர்பில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் நேற்றுவரையில் வேட்புமனுக்களை இறுதிப்படுத்த முடியாத நிலையில் இருந்தது. யாழ். மாவட்டத்தில் வேட்பு மனு பூர்த்தி செய்யப்பட்டாலும் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் பொருத்தமான வேட்பாளர்களை தெரிவு செய்ய முடியாமையினால் வேட்பு மனுக்களை பூர்த்தி செய்வதில் இழுபறி நிலையே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுவதற்கு அதிகளவானவர்கள் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால், இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனுவை பெற மிக அதிக அளவில் போட்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனுவை எதிர்பார்த்து காத்திருந்தும் அது கிடைக்காத சிலர் ஏமாற்றமடைந்துள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதற்கு முன்னரும் கடுமையாக உழைத்த சிலர், நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடலாம் என நம்புகின்றனர். ஆனால் ஒரு கட்சியில் இருந்து போட்டியிடக்கூடிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதாலும், பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாலும் பலர் வாய்ப்பை இழந்துள்ளனர்.

இந்நிலைமை தொடர்பில் பலர் அதிருப்தியில் இருப்பது தெரியவருகிறது. பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது. இதனால், இன்று முழுவதும் பெரும்பாலான கட்சிகள் தமது வேட்பு மனுக்களை இறுதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# அஜித் நிவார்ட் கப்ரால் உள்ளிட்ட நால்வருக்கு வெளிநாடு செல்ல தடை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றில் இன்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு, கிரீஸ் நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது, இலங்கை அரசுக்கு சொந்தமான பணத்தை கிரீஸ் பத்திரங்களில் முதலீடு செய்து இலங்கை அரசுக்கு 1.8 பில்லியன் ஷரூபாவிற்கு மேல் இழப்பு ஏற்படுத்தியதாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டதன் பின்னர், பிரதிவாதிகளில் ஒருவரை தலா 10 மில்லியன் ஷரூபா பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிகள் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்த நீதிமன்றம், அவர்களது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், வெளிநாடு செல்வதாக இருந்தால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுமாறும் உத்தரவிட்டுள்ளது



# யானை சின்னத்தில் ஜீவன் போட்டி

(தலவாக்கலை பி.கேதீஸ்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில், இ.தொ.கா வின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியின் கீழ் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# மக்கள் போராட்ட முன்னணியும் இன்று வேட்புமனுத் தாக்கல்



வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை மக்கள் போராட்ட முன்னணியினர் இன்று வியாழக்கிழமை கையளித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் முற்பகல் 11 மணியளவில் மக்கள் போராட்ட முன்னணியினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல் உள்ளிட்ட குழுவினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

மக்கள் போராட்ட முன்னணியினர் குடைச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது

## எமது கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரது அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி ஒரு கட்சியாகவோ அல்லது சுயேட்சையாகவோ போட்டியிடாது எனவும் இது கட்சியின் கூட்டுத் தீர்மானம் எனவும் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாடு முழுவதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திலகராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இன்று பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்

வடக்கு கிழக்கு மற்றும் மலையக பகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்திலே நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட உள்ளது.

இது தொடர்பில் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய திலகராஜ், கடந்த 75 ஆண்டுகளாக நடைபெற்று வந்த ஆட்சி அமைப்புக்கு மாறாக கிராமிய மட்டத்திலிருந்து ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

அதே போல எதிர்வரும் தேர்தலில் சரியான நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று நம்புகிறேன் என தெரிவித்துள்ளார்

## நீதி மறுக்கப்படுவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“இலங்கையில் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் கடந்தகால அட்டுழியங்களிற்கு நீதியை தேடும் முயற்சிகளிற்கு இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானம் மிகவும் அவசியமானது.

பாதிக்கப்பட்டவர்களிற்கும் அவர்களது குடும்பத்தவர்களிற்கும் நீதி மறுக்கப்படுவது தொடர்ந்தால் இலங்கை தொடர்பில் சர்வதேச நடவடிக்கை அவசியம்.


பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களிற்கு என்ன நடந்தது என்பதை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும், நீதியை தேடும் பாதிக்கப்பட்டவர்களை மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாதுகாப்பு படையினர் துன்புறுத்துவதை நிறுத்தவேண்டும் முன்னைய அரசாங்கங்களினால் தடுக்கப்பட்ட குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.






# இந்திய மோட்டார் வாகனத் துறையில் மாற்றத்துக்கு வித்திட்ட தொழிலதிபர்!

## டாடா குழுமத்தின் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் காலமானார்



இந்தியாவின் முன்னணி நிறுவனமான டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் ரத்தன் டாடா காலமானார். அவருக்கு வயது 86. இந்திய வாகனத் துறையில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்திய தொழிலதிபர்களில் முன்னோடியானவர் இவர்.

டாடா குழுமத் தலைவராக இருந்து, அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பிரபல தொழிலதிபர் ரத்தன் டாடா. மும்பையில் புகழும் வளமும் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர். டாடா குழும நிறுவனர் ஜாம்ஷெட்ஜி டாடாவின் கொள்ளுப் பேரன். 1962-ல் அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்தில் கட்டமைப்புப் பொறியியலில் பி.எஸ சி. பட்டம், 1975-ல் ஹார்வர்டு வணிகக் கல்லூரியில் உயர் மேலாண்மைப் பட்டம் பெற்றார்.

1962-ல் டாடா குழுமத்தில் இணைந்தார். 1971-ல் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியிருந்த தி நேஷனல் ரேடியோ அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி நிறுவனத்தின் (நேடஉழ) பொறுப்பு இயக்குநராக பொறுப்பேற்றார். இவரது ஆலோசனைகளால் நெல்கோ மீண்டது. 1991-ம் ஆண்டு ஜே.ஆர்.டி.டாடாவிடம் இருந்து டாடா குழுமத் தலைவர் பொறுப்பை ஏற்றார். பல புதிய திட்டங்களைப் புகுத்தி நிறுவனத்தின் வருமானத்தை 10 மடங்கு உயர்த்தினார். கோரஸ், ஜாகுவார் லேண்ட் ரோவர் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களை டாடா குழுமம் வாங்கியது.

பங்குச் சந்தையில் மிக அதிக சந்தை முதலீடு கொண்டதாக டாடா குழுமம் திகழ்கிறது. இவரது வழிகாட்டுதலில் டாடா கன்சல்டன்சி சர்வீஸ் பொது நிறுவனமானது. நியூயார்க் பங்குச் சந்தையிலும் பட்டியலிடப்பட்டது.

நடுத்தரக் குடும்பத்தினர் ஒரு பைக்கில் 4 பேராக கஷ்டப்பட்டுப் போவதைப் பார்க்கும்போதெல்லாம், குறைந்த விலையில் சிறிய கார் தயாரிக்க வேண்டும் என்ற உந்துதல் இவரிடம் ஏற்பட்டது. இந்த கனவு, 'டாடா இண்டிகா' வடிவில் 1998-ல் நிஜமானது. உலகிலேயே மலிவாக ஷரூ.1 லட்சத்துக்கு கார் வெளியிடுவதாக அறிவித்தார். 'டாடா நானோ' கார் 2008-ல் உற்பத்தியாகி வந்தபோது அதன் செலவு அதிகரித்துவிட்டது. ஆனாலும், விலையை உயர்த்த மறுத்துவிட்டார்.

இந்தியாவின் மோட்டார் வாகனத் தொழில் துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படுத்திய தொழிலதிபர் இவர். பிரதமரின் வணிகம் மற்றும் தொழில்கள் தொடர்பான குழுவில் உறுப்பினராக இருந்தவர். பல்வேறு வெளிநாட்டு அறக்கட்டளைகளுக்கு அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தவர். பில்கேட்ஸ் நிறுவனத்தின் இந்திய எய்ட்ஸ் திட்டக் குழுவிலும் இருந்தவர்.

பத்மபூஷண், பத்மவிபூஷன், நற்பணிகளுக்கான கார்னகி பதக்கம், சிங்கப்பூர் அரசு வழங்கிய கவுரவக் குடிமகன் அந்தஸ்து, பிரிட்டிஷ் அரசின் ஹானரரி நைட் கமாண்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர் ஆகிய கவுரவங்களைப் பெற்றுள்ளார். டைம் இதழ் வெளியிட்ட உலகின் செல்வாக்கு படைத்த 100 பேர் பட்டியல் மற்றும் உலகின் சக்திவாய்ந்த நபர்கள் பட்டியலில் இடம்பெற்றவர். 2012 வரை டாடா குழுமத் தலைவராக இருந்த இவர் தற்போது டாடா குழும அறக்கட்டளைகளின் தலைவராக இருந்து வழிநடத்தியவர்.

இந்தியக் குடும்பங்கள் பாதுகாப்பான சாலைப் பயணம் மேற்கொள்ள வேண்டுமென விரும்பியவர்: அது குறித்து இந்தியக் குடும்பங்கள் சாலையில் ஸ்கூட்டர்களில் பயணிப்பதை நான் பார்த்துள்ளேன். அந்த பயணத்தின் போது தாய் மற்றும் தந்தைக்கு மத்தியில் சாண்ட்விட்ச் போல குழந்தைகள் அடைப்பட்டு இருப்பார்கள். அவர்களது பாதுகாப்பான பயணித்துக்காக என்ன செய்யலாம் என யோசித்து போது உதயமான ஐடியா தான் 'நானோ' கார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# அம்பாறை மாவட்ட வாணி விழா









இந்துக்களின் வாணி விழா அம்பாறை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நேற்று நடைபெற்ற போது...
(படங்கள் வி.ரி. சகாதேவராஜா)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2024 இல் வெளியிடப்பெற்றது.